REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 7 காசுகள் (0—1—0) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★
மூன்று மாதம் ... ... ரூ. 6
ஆறு மாதம் ... ... ரூ. 12
ஒரு வருடம் ... ... ரூ. 24
தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: பங்குனி 27உ செவ்வாய் (9—4—57) ★ ★ வெளியீடு: பங்குனி 28உ புதன் (10—4—57) [இதழ் 258

சிற்றுளியால் கல்லும் தகர்ந்துவிடும்

சட்டசபையில் தி. மு. க. பற்றி நெடுஞ்செழியன்

'குற்றம் புரிபவரைத் தடுக்கும் அதிகாரம் போலீசுக்கு இல்லையாம்'

காங்கிரஸ் சர்க்கார் தேர்தல் நடத்திய இலட்சணம் குறித்து விளக்குகிறார்

"15 பேர்கள்தானே சட்டசபைக்குச் செல்கிறார்கள்? இவர்களாலே என்ன செய்யமுடியும்?—என்று சிலர் கேட்கிறார்கள்.

"அவர்களுக்கு நான் சொல்கிறேன்—'சிற்றுளியால் கல்லும் தகரும், தகரா கொல்லுலைக் கூடத்தினால்' என்ற முதுமொழியைத்தான் நாம் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். பெரிய மலையைக்கூட சிற்றுளி பிளந்துவிடும்; ஆனால், கொல்லனின் உலைக்கூடத்தில் உள்ள பெரிய இரும்புத் தூணால் அது முடியாது. எனவே, 'சிற்றுளிதானே' என்று பேசுபவர், பேசட்டும்!

"டெல்லி மக்கள் சபையில் கடந்த 5 ஆண்டுக் காலத்தில் சுமார் 500 உறுப்பினர்கள் இருந்தனர்; இவர்களில் எத்தனை பேர்களின் பெயர்களை நாம் அடிக்கடி கேட்கிறோம்; ஒரு காமத், ஒரு கிருபளானி—இப்படி விரல்விட்டு எண்ணக்கூடியவர்களின் பெயரைத்தானே நாம் கேட்கிறோம்? அதுபோல, சட்டசபையிலும், மக்கள் சபையிலும் நாம் எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும், சிற்றுளிகளைப் போல நன்கு பணியாற்றமுடியும்"

—என்று பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 8—4—57 அன்று சென்னை—பெத்துநாய்க்கன்பேட்டை தி. மு. க. கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

அளவு மீறவில்லை

"பெற்ற வெற்றி குறித்து நாம் ஒன்றும் அளவுக்கு மீறி மகிழ்ச்சியடையவில்லை; அதே போல, எதிர்பார்த்த அளவு வெற்றி பெற முடியவில்லையே என்பதால் அளவுக்கு மீறி கதிகலங்கிப் போய்விடவும் இல்லை.

வெறி அல்ல!

"வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்ற வெறி கொண்டலையவும் இல்லை நாம்; தோல்வி கண்டு துவண்டுவிடவும் இல்லை!

தோற்றவர்கள் அல்ல!

"நாங்கள் தோற்றவர்கள் அல்ல - நாங்கள் வெற்றி பெறத் தவறியவர்கள்; அவ்வளவுதான்!

எதிலே வெற்றி பெற்றார்கள்

"எங்களை, வெற்றி பெற்றவர்கள் என்று கூறிக் கொள்கிறவர்கள் எதிலே வெற்றி பெற்றார்கள்? எங்களையும் காண்கிறீர்கள் — அவர்களையும் காண்கிறீர்கள்; எங்களின் அறிவு - ஆற்றல் - தகுதி திறமை - பொதுவாழ்க்கைப் பண்பு இவற்றையும் நீங்கள் அறிவீர்கள்; அவர்களையும் அறிவீர்கள். நீங்கள் உணரவில்லையா, எங்களை அவர்கள் எதிலே வெற்றி பெற்றுள்ளார்கள் என்று!

எங்களை வெற்றி பெற்றவர்கள், பித்தலாட்டத்தால்—அதிகாரத்தால் —பணபலத்தால் - ஆதிக்கத்தால் - தில்லுமுல்லுகளால் எங்களுக்கு வெற்றி கிடைக்காமல் செய்தார்களே தவிர, கொள்கையைக் காட்டி மக்களிடம் ஓட்டுப் பெற்று வெற்றி பெற்றார்கள்?

தோற்றவர்கள் எங்கே?

"எங்களைத் தோற்றவர்கள் என்கிறார்கள்; ஆனால், நாங்கள் என்றும்போல் இன்றும் மக்களிடை உலவுகிறோம். தோற்றவர்கள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். ஆனால் நாங்கள் அப்படி இல்லையே! காங்கிரசின் சார்பில் தோற்றவர்கள் எங்கே? மக்களிடை அவர்களைக் காண முடியவில்லையே, ஏன்? நாங்கள் என்றும்போல் இன்றும்—இனி என்றும் முன்னைவிட அதிகமான வீறுடன், உற்சாகத்துடன், விட்ட பணியினை மேலும் தொடர்ந்து செய்ய முற்பட்டிருக்கிறோம்.

அறிந்து புரிந்து!

"நாங்கள் வசதிகளற்ற நிலையில் பெற்ற வாக்குகள், 16½ இலட்சத்திற்கும் அதிகம். 112 இடங்களில் போட்டியிட்டு 16½ இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்றிருக்கிறோம். காங்கிரஸ் 201 இடங்களில் போட்டியிட்டு 50½ இலட்சம் வாக்குகளே வாங்கியிருக்கிறது. நம்மைவிட காங்கிரஸ் இரண்டு பங்கு வாக்குகளைத்தான் வாங்கியிருக்கிறது. நாம் போட்டியிட்ட 112 இடங்களில் மட்டும் காங்கிரஸ் வாங்கிய ஓட்டுகள் சுமார் 30 இலட்சம். நாம் பெற்ற வாக்குகள் 16½ இலட்சம்.

"வாக்குகளைப் பொறுத்து, நம்மைவிட ஒரு பங்குமட்டுமே பெற்ற காங்கிரஸ், இடங்களில் நம்மைப்போல் 10 பங்கு பெற்றிருக்கிறது—நாம் 15 இடங்களைப் பிடித்திருக்கிறோம்; அவர்கள் 151 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

"நாம் பெற்ற வாக்குகள், நன்கு அறிந்து — புரிந்து — தெரிந்து தரப்பட்ட வாக்குகள்; காங்கிரசார் வாங்கிய ஓட்டுகள் அப்படியா?

"நாம் வாக்குகள் பெற்றோம்—அவர்கள் ஓட்டுகளை வாங்கினார்கள்!

'வெறுங் கையோடு சென்றேன்'

"என்னைப் பொறுத்தவரையில் நான் சேலத்திற்கு வெறுங் கையோடுதான் சென்றேன். ஒரு நண்பர் வீடு கொடுத்தார்; எதிர்வீட்டு நண்பர் சோறு போட்டார், தேர்தல் முடியும் வரை! ஒரு நண்பர் கார் கொடுத்தார்; எனக்காக வேலை செய்த தோழர்களில் ஒருவர் கூட—ஒரு வேளை உ சாப்பிடுவதற்குக்கூட என்னிடம் காசு கேட்டதில்லை. மேலும், நான் அங்கு பேசிய கூட்டங்களில் எல்லாம், நாம் எப்படியேனும் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகத் தோழர்கள் கண்ணியத்திலிருந்து — நேர்மையிலிருந்து வழுவக்கூடாது என்று எச்சரித்திருக்கிறேன். கண்ணியக் குறைவான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வெற்றிபெறுவதைவிட, நேர்மையான நடவடிக்கைகளால் தோல்வியை அணைத்துக் கொள்வதையே தான் விரும்பினேன். அதனால்தான் நாங்கள் தோல்வி கண்டாலும் கதிகலங்கிப் போய்விடாமல் இருக்கிறோம்.

நேர்மையா?

"காங்கிரசார் நேர்மையாகவா தேர்தலில் ஈடுபட்டார்கள்? நேர்மை—நாணயம்பற்றிக் கவலைப்படும் காங்கிரசார் இருந்தால் அவர்கள், நெஞ்சில் கைவைத்துச் சொல்லட்டும் பார்க்கலாம்.

"வாக்காளருக்கு ஆசை காட்டுவது கூடாது—விருந்து வைப்பது கூடாது—வாகன வசதி செய்து தருவது கூடாது என்று சட்டம் இயற்றியவர்கள் காங்கிரசார்தான்!

"பரிசுகொடுத்தல், காசு கொடுத்தல் கூடாது என்று தேர்தல் சட்டம் கூறுகிறது; அதைச் செய்ததும் காங்கிரஸ் சர்க்கார்தான்!

"ஆனால், இந்தச் சட்டங்களை மீறி குற்றம் புரிபவர்களைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை மேற்கொண்டது உண்டா?

"சேலத்தில், வாக்குப் பதிவு நாளன்று பட்டப்பகலில் ஒருவர், சில்லரையாக மாற்றி வைத்துக்கொண்டு, ஓட்டர்களுக்கு நாலணு; எட்டணு வீதம் தந்துகொண்டிருந்தார்; இந்த அநியாயத்தைச் சுட்டிக் காட்டி, அருகிலிருந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை அதைத் தடுக்குமாறு கேட்டபோது அவர் சொன்னார்—'இதைத் தடுக்கிற அதிகாரம் எனக்கு இல்லை. ஏதாவது குழப்பம் நடந்தால் அதனை அடக்கவே எங்களுக்கு உத்தரவு' என்று, கூறினார். நான் கேட்கிறேன்—இதற்குப் பெயர் ஜனநாயகத் தேர்தலா? நேர்மையான தேர்தலா?—என்று!

"பணம் தருவது குற்றம் என்று காங்கிரஸ் சர்க்கார் செய்த சட்டம் கூறுகிறது. ஆனால், அந்தக் குற்றம் புரிப

(4-ம் பக்கம் பார்க்க)

தோழர் கண்ணதாசன் தாக்கப்பட்டார்

கோலார் தங்கவயலில் கம்யூனிஸ்டுகள் பேயாட்டம்

பொதுக்கூட்டத்தில் கல்லெறிந்து குழப்பமூட்ட முயற்சி

7—4—57 ஞாயிறன்று கோலார் தங்கவயலில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் காலித்தனத்தால் தோழர் கண்ணதாசன் அவர்களின் மண்டை உடைந்தது; முகத்திலும் நெற்றியிலும் பலத்த காயம் ஏற்பட்டது.

முனியரத்தினம் என்ற தோழருக்கும் துரைராஜ் என்பவருக்கும் வயிற்றிலும் கன்னத்திலும் பலத்த காயம் ஏற்பட்டது.

விவரம்:

7—4—57 ஞாயிறன்று தங்கவயல் தி. மு. கழகச் சார்பில், தங்கவயல் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நாற்பதாயிரத்திற்கு மேற்பட்டமக்கள் கூட்டத்தில் குழுமியிருந்தனர்.

கூட்டத்திற்குத் தோழர் எம். இ. சம்பந்தம் அவர்கள் தலைமை வகித்தார்.

தலைமை உரைக்குப் பின் தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் தென் மாவட்டங்களில் கம்யூனிஸ்டுகள் நடத்திய அழிவு சக்திகளைப் பற்றிப் பேசினார்.

அடுத்து தோழர் கண்ணதாசன், கம்யூனிஸ்டுகளின் 'ஏக இந்திய'த் தத்துவம் போலித்தனமானது என்று விளக்கினார்.

அந்த நேரத்தில் நகரின் தென் பகுதியிலிருந்து ஒரு கம்யூனிஸ்டு (அன்றைய தினமே அங்கு தோழர் ஜீவானந்தம் கலந்து கொள்ளும் கூட்டம் நடைபெற்றது; ஆனால் அவர் வரவில்லை) ஊர்வலம் தி. மு. கழகக் கூட்டத்தை நோக்கி வந்து, கழகக் கூட்டத்தில் கலந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் கோஷங்களை எழுப்பினர்; கூட்டத்திலிருந்தவர்கள் எழுந்து, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றார்கள்.

இந்தக் குழப்பத்தால் கூட்டத்திலிருந்த தாய்மார்கள் சிதறி ஓடினர்; கூட்டத்தைப் போலீசாரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இதையறிந்த கம்யூனிஸ்டுகள், மேடையை நோக்கிக் கற்களை வீசினர்; சிலர் மேடைக்கு அருகிலேயே ஓடிவந்து பெருங்கற்களை வீசினர்.

அதனால்தோழர் கண்ணதாசனுக்கு நெற்றியில் பலமான அடிபட்டது; தொடர்ந்து மூக்கின்மேலும் ஒருகல்லடி விழுந்தது.

மேடையின் அருகே நிறுத்தப்பட்டிருந்த மோட்டாரில் தோழர் தென்னரசு உட்கார்ந்திருந்தார். இருபது பேர் காருக்கு முன்னும் பின்னும் இருந்துகொண்டு மண்ணை வாரி வீசினர். கம்புகளால் காரைத் தாக்கினர்.

பிறகு போலீசுக்கு தகவல் தரப்பட்டது. ஆயுதந்தாங்கிய போலீசார் நான்குபுறமும் சூழ்ந்துகொண்டவுடன் கம்யூனிஸ்டு காலிகள் ஓடி ஒளிந்துவிட்டனர்.

தோழர் கண்ணதாசன் பலமான காயத்தோடு மேற்கொண்டு ஒரு மணி நேரம் பேசினார்.

தோழர் கண்ணதாசன்மீது வீசப்பட்ட கல்லைக் கூட்டத்தில் ஏலத்திற்கு விடப்பட்டதில், அதனைத் தோழர் செயராமன் என்பார் ரூ. 60-க்கு ஏலத்தில் எடுத்தார்.

கூட்ட முடிவில் தங்கவயல் தி. மு. க. தோழர்கள் போலீசில் தகவல் கொடுத்தனர்.

தோழர் கண்ணதாசனை போலீஸ் அதிகாரிகள் நேரில் கண்டு மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்தனர்.

டாக்டர் காயத்தைப் பார்த்துவிட்டு 'இது வேகமாகத் தாக்கப்பட்டிருக்கிறது' என்றார்.

அன்றிரவு அங்கு தங்கி, மறுநாள் காலை 10 மணியளவில் தோழர்கள் கண்ணதாசன், தென்னரசு, திருப்புத்தூர் தோழர்கள் நல்லமுத்து, சங்கரன் ஆகிய நால்வரும் சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

தங்கவயலில் பலத்த போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. நகர மக்கள் பீதியடைந்திருக்கின்றனர்.

உள்ளூர் பிரமுகர்கள், காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கூட்டம் முடிந்ததும் தோழர் கண்ணதாசனைச் சந்தித்து கம்யூனிஸ்டுகளின் காலித்தனத்தால், தங்கவயலுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது என்று கூறி வருத்தம் தெரிவித்தனர்.

இப்பொழுது தோழர் கண்ணதாசன் சென்னையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ந. - கி.)

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 9—4—57 செவ்வாய்

காத்திருக்கும் சோதனைக் காலம்

• டெல்லிப் பெரியவர்களுக்கும், அவர்களின் கைப்பாவையான சென்னை சர்க்காருக்கும் பெரியதொரு 'சோதனைக் காலம்' எதிர்நோக்கியிருக்கிறது என்ற பறையறிவிப்பு கொழும்பு நகரிலிருந்து கிடைத்திருக்கிறது.

அண்டை நாடான இலங்கையின் நேசம் வேண்டும் என்று தங்களது காதலை வாய்விட்டுச் சொல்லிவிட்டார்கள் அல்லவா, டெல்லிப் பெரியவர்கள்? அதன் எதிரொலி கொழும்பு நகரில் கேட்கிறது.

'நேசம் வேண்டும்' என்ற மேனன் கூற்று, இலங்கை வாழ் தமிழர் நலனுக்குக் 'கூற்று' என்பதை நாம் முன்பே எழுதியிருந்தோம். நேசத்திற்காக, தமிழர்தம் நலனைப் பண்டமாற்றுச் செய்யத் துணிந்துவிட்ட டெல்லிப் பேரரசின் போக்கினை வன்மையாகக் கண்டித்திருந்தோம்.

நியாயம், நேர்மை, நீதி, மனிதாபிமான உணர்வு, செய்நன்றி அறிதல் போன்ற மனிதப் பண்புகள் ஆகியவற்றிற்குக் கல்லறை எழுப்பிடுவோரின் நேசத்திற்கு, பல லட்சம் மக்களை 'நாடற்றவர்கள்' என்ற கேவலத்திற்கும், அவமானத்திற்கும் ஆளாக்கத் துணிந்துவிட்ட டில்லிப் பெரியவர்களின் வன்நெஞ்சம், இன்றில்லாவிட்டாலும் சிக்கிரமே, பழிவாங்கப்படும் என்பதை அவர்கள், காலங் கடந்த இன்றேனும் உணருதல் நலம்.

பஞ்சசீலப் பண்டிதர்களின், பிரமாதமான விளம்பரம் தரப்படும் இராஜ தந்திரமும், விவேகமும், அவர்கள் தங்களின் கீழ்த்திசை, மேற்றிசை நாட்டு நண்பர்களோடு சேர்த்து வெளியிடும் பிரகடனங்களில் அல்லது பண்டிதர் தனியாகவும் தன்னது அருமை மகளார் இந்திரா காந்தியாருடன் கூட்டாகவும் மேற்கொள்ளும் நல்லெண்ணச் சுற்றுப் பயணங்களிலும், உரைத்துப் பார்க்கப்பட மாட்டாது; மாறாக, அவர்களது விசாலமான விளம்பரம் தரப்படும் இராஜதந்திரம், இலங்கை 'இந்தியர்' பிரச்சினை போன்ற சில உரைகற்களில்தான் தேய்த்துப் பார்க்கப்படும் என்பதையும் நாம் சொல்லத் தேவையில்லை.

நேசம் வேண்டும் தான். அதற்காக நீதி வேண்டாம் என்கிறீர்களா?

நேசம் வேண்டும் தான். அதற்காக, நியாயம் தேவையில்லை என்கிறீர்களா?

டில்லிப் பெரியவர்களின் இந்தப் போக்கு புரியவில்லையே!

இலங்கை வாழ் 'இந்தியர்' தம் நலன்களைப் பலியிடுவதாலும், இலங்கையின் நேசம் வேண்டும் என்ற கூற்று கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவதற்கு ஒப்பானதல்லவா என்று, இலங்கை வாழ் தமிழர் கேட்பரே!

இலங்கையின் நேசத்திற்காக, அங்குள்ள 'இந்தியர்' தம் நலன்களைக் காவு கொடுக்கவும் தயார் என்று கூறுவது, உலக அரங்கில், 'இந்தியா'வைத் தாழ்த்திக் காட்டாதா?

'இந்தியா'வின் நேசத்திற்காக, இலங்கையல்லவா ஏங்கி நிற்க வேண்டும். அதைவிடுத்து, அதன் நேசத்திற்காக, மலைபத்தனை பெரிய 'இந்தியா' ஏங்கி நிற்கிறது என்று கூறுவது எதனால்?

மேலும் நேசம் வேண்டுமென்றால், நேசமுற, பாசம் கொள்ள, உறவாட, ஒன்றிப் பழக, சில அடிப்படை அம்சங்கள் பழகுவோரிடை வேண்டுமே? அப்போதுதானே, ஒத்த அம்சங்கள் சிலவேனும் உடைய இருவரிடைத்தானே நேசம் முகிழ்க்க முடியும்?

நேசம் வேண்டும் என்று பேசுகிற டெல்லிப் பெரியவர்களையும், பதிலுக்கு நேசிக்கவிருக்கும், பண்டாக்களையும் ஒன்றுபடுத்துகிற அம்சங்கள் என்ன?

பண்டாக்களிடை சிங்கள வெறி உச்சம் பெற்றிருக்கிறது; தமிழர் மீது வெறுப்பும் கசப்பும் தலைதூக்கி நிற்கின்றன. அதுபோல, பண்டிதர்களுக்கும் தென்னாட்டவர் மீது, வெறுப்பும் கசப்பும் ஏராளம் உண்டு; அவர்களுக்கும் வடநாட்டு வெறி, பாசிசவெறி உச்சி முதல் உள்ளங்கால்வரை உண்டு.

இந்த இனவெறி, சிறுபான்மையோரை அடக்கி ஆளும் ஏகாதிபத்திய வெறி, தமிழர் மீது கொண்டுள்ள வெறுப்பு, இவைதான் பண்டாக்களையும், பண்டிதர்களையும் பரஸ்பரம் நேசிக்கத் தூண்டும் அம்சங்களா? என்று மனம் குமுறிக் கேட்கின்றனர், இலங்கை வாழ் தமிழர்.

'இலங்கையரே! இந்தியாவின் நேசம் வேண்டுமானால், இலங்கை வாழ் இந்தியருக்கு நியாயம் வழங்குங்கள்' என்று கனத்த குரலில்—கடுகடுத்த முகத்தோடு, எச்சரிக்கையைத் தொக்க வைத்துப் பேசவேண்டிய டில்லிப் பெரியவர்கள், நேசம் வேண்டும் என ஏக்கம் தொனிக்கப் பேசலானேன்?

காஷ்மீர் விவகாரத்தில், பிரிட்டன் தங்களுக்கு விரோதமாக நடந்துகொள்கிறது என்றதும், அசைக்க முடியாது என்று அவர்களே கூறிய 'காமன் வெல்த்' உறவை, அறுத்துக்கொள்வது பற்றி யோசிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்று பேசினார்களே இதே டில்லிப் பெரியவர்கள? காஷ்மீர் வாழ் மக்கள் வடநாட்டவர்—என்பதால்தான் பிரிட்டனுக்கு எச்சரிக்கை விடுத்தனரா? இலங்கை வாழ் தமிழர், தென்னாட்டவர் என்பதால் தான் நேசம் வேண்டும் என்ற ஏக்கத்தை வெளியிடுகிறார்களா? என்று நாடற்றவர்கள் என்ற அவமானத்தால் தலை குனிந்து புகைச்சலுடன், சோகம் கப்பிய நிலையில் உள்ள கொந்தளிக்கும் கடலனைய உள்ளத்தவன் கேட்கிறான்.

நேசம் வேண்டும் என்ற பெரியவர்களின் தரம், கொழும்பு நகரில் ஆறரை இலட்சம் தமிழர் நாடற்றவராக்கப்படுவர் என்று எதிரொலிக்கிறது.

என்ன செய்யப் போகின்றனர், இலங்கையின் நேசம் வேண்டுபவர்களும், பெரிய மனிதர்களும் அவர்களது தமிழ் நாட்டுத் தாசர்களும்?

பெரிய சோதனைக் காலம் காத்திருக்கிறது. அப்போது சந்திப்போம், அவர்களை மீண்டும்!

உயர்ந்திருக்கும் கோபுரத்தால் என்ன பலன் கிடைக்கும்?

காங்கிரசின் வளர்ச்சியும் அதுபோன்றதேயாகும்

பாராட்டுக் கூட்டத்தில் அண்ணா கருத்துரை

உடுமலைப்பேட்டை, ஏப். 3—

"கோபுரம்போல் வளர்ந்திருக்கும்கட்சி காங்கிரஸ்—என்கிறார்கள். கோபுரம் உயர்ந்திருந்தும் யாருக்கும் பயன்படாததைப்போல் காங்கிரசும் மக்களுக்குப் பயன்படுவதில்லை.

"காங்கிரஸ் கோபுரத்தில் முளைக்கும் செடிகள்தான் மற்ற அகில இந்தியக் கட்சிகள்!

"மேசையின்மீது வைக்கப்படும் பூங்கொத்துக்கள் சுயேச்சைகள்; ஆனால் தி. மு. கழகம் வீட்டுக்கீரை!

"கோபுரத்துச்செடி தானும் வளராது—கோபுரத்தையும் சும்மா விடாது; மேசைமேல் உள்ள பூங்கொத்து இரண்டு நாட்களில் வாடிவிடும். இவற்றால் மக்களுக்கு எந்தவிதப் பலனும் இல்லை.

"ஆனால், தோட்டத்திலே உள்ளகீரை பயன்படுவதைப்போல் தி- மு. கழகம் எப்பொழுதும் மக்களுக்குத் தொண்டாற்றும்"

என்று அண்ணா அவர்கள், உடுமலையில் நடைபெற்ற மாபெரும் பாராட்டுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேற்று இரவு 8 மணிக்கு, உடுமலைப்பேட்டையில், அண்ணா அவர்களைப் பாராட்ட மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஏராளமான மக்கள் திடலில் கூடியிருந்து, அண்ணா அவர்களும், தோழர் மதியழகனும் வந்தபோது மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வரவேற்றனர். ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அண்ணா அவர்களுக்கும், தோழர் மதியழகனுக்கும் அணிவிக்கப்பெற்றன.

"நான் தேர்தலில் தோற்றுவிட்டதினால் மனம் துவண்டுவிடமாட்டேன். கழகக் கொள்கைகளைப் பரப்பும் பணியில் நம் தொகுதியில் மேலும் உற்சாகத்துடன் ஈடுபடுவேன். இங்கே நடக்கின்ற கோலாகலமான இந்த விழாக் கோலத்தைக் காணுகின்ற எவரும் தி. மு. கழகம் தேர்தலில் தோற்றுவிட்டது என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கு மக்களிடையே செல்வாக்கு பெற்ற தி. மு. கழகம் அடுத்த முறை பெருவெற்றிகள் பெறும் என்று நம்புகின்றேன்,"

என்று, தோழர் மதியழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

★

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சாதிப் பிரிவுகளும் வேறு பல சூழ்நிலைகளும் காரணமாக இந்தத் தொகுதியில் மதியழகன் தோற்றுவிட்டார். நான் சட்டசபையில் இருக்க வேண்டும் என்று கருதியவர்களில் மதியழகனும் ஒருவராவார்.

"தி. மு. கழகம் 15 இடங்களில் தானே வெற்றி பெற்றது—என்று எளனம் பேசுகின்றவர்கள், கழகம் பெற்றிருக்கும் வாக்குகளை கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். 17 இலட்சம் மக்கள் கழகத்தின் கொள்கைகளை ஒப்புக்கொண்டு வரவேற்கின்றார்கள் என்று இந்தத் தேர்தல் நமக்கு உணர்த்தியிருக்கிறது."

பஞ்சாலைத் தொழிலாளர்கள் 801 காலணாக்களும், அன்பர்கள் ரூ. 15—8—0-ம் நிதியளித்தனர்.

இரவு 11-30 மணியளவில் கூட்டம் இனிது முடிந்தது.

அகிலத்தின் முடிவு?

அமெரிக்க நிபுணர் கண்டுபிடிப்பு!

கலிபோர்னியா, ஏப். 8—

"பெட்ரோல் முதலியன எரிவதால் உஷ்ணமான வாயு வகைகள் உண்டாகின்றன. அவை பூமியின் காற்று மண்டலத்தை சூடாக்கிக்கொண்டு வருகின்றன. இதனால் துருவ மண்டலத்திலுள்ள பனி மலைகள் வேகமாக உருகி வருகின்றன; இதன் விளைவாக அடுத்த 50 அல்லது 60 ஆண்டுகளில் கடல் மட்டம் 30 அடி உயர்ந்துவிடும்; அதன் பின், பள்ளத்தில் உள்ள நியூயார்க், டோக்கியோ போன்ற நாடுகளும், பூமியில் பெரும்பாகமும் பொங்கும் நீரில் மூழ்கிவிடும்,"

என்று, 'ஸாண்டா மோனிகா ஈவினிங் அவுட்லுக்' என்ற அமெரிக்க இதழில், அமெரிக்க பூகோள விஞ்ஞானி ஜோசப் காப்லான் என்பவர் எழுதியுள்ளார்.

'உடனடியாக விஞ்ஞானிகள், காற்று மண்டலத்தின் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான முறையைக் கண்டுபிடிக்க வேண்டும்' என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

மைசூர், ஏப். 8—

மே மாதம் 1-ந்தேதியிலிருந்து மைசூர் அரண்மனையில் பணியாற்றுபவர்களில் 500 பேரை வேலையில் நீக்கிவிடுவதாக அரண்மனை நிர்வாகத்தினர் முன்னறிவிப்பு கொடுத்துள்ளனராம்.

ஈரோட்டில் நாடகக் கலை துவக்க விழா

ஈரோடு, ஏப். 4—

அண்ணா அவர்களின் தலைமையில் நேற்று இரவு நாடகக் கலை துவக்க விழா நடைபெற்றது.

"நாடகம் மக்களுக்கு ஆற்றும் பணியின் மேன்மையினை இன்று எல்லாக் கட்சிக்காரர்களும் உணர்ந்திருக்கின்றனர். 'நாடகமாடிகள்' என்று, கேலி பேசுவோர்கூட நடிக்க முன் வருவதனைக் காணுகிறோம். இந்த நல்ல கலையை மக்களுக்கு அறிவுத் தெளிவு தருவதற்காகப் பயன்படுத்தி நல்ல பலன் காணலாம்"

என்று, அண்ணா அவர்கள், தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள்.

அடுத்து, ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் ஒரு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த தோழர் சின்னசாமி அவர்கள் நன்றி நவின்றார்.

தோழர் என். என். கண்ணப்பா அவர்களின் குழுவினரின் 'குலப் பெண்' நாடகம் சிறப்புற நடைபெற்றது.

★

மாமண்டூரில்

மாமண்டூர், ஏப். 5—

தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா அவர்களையும், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்களையும் பாராட்ட நேற்று இங்கு மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

"கிராம மக்கள் முன்போல் அறியாமையில் மூழ்கிக் கிடக்காமல் மெல்ல மெல்ல அறிவொளிபெற்று விழிப்புணர்ச்சி பெறுகின்றார்கள் என்று இந்தத் தேர்தல் நமக்கு உணர்த்தியிருக்கிறது. இந்த சூழ்நிலை நன்கு வளர்ச்சியடைந்தால் நாடு நலம் பெறும்"

என்று, அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், அ. க. தங்கவேலர், சி. வி. எம். அண்ணாமலை, க. அறிவழகன் ஆகியோரும் பேசினர்.

★

சுருட்டலில்...

சுருட்டல், ஏப். 5—

நேற்று இரவு 10 மணியளவில் அண்ணா அவர்களையும், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்களையும் பாராட்ட ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கிராமப் பொதுமக்கள் பேரார்வத்துடன் கூடி விழாபோல் கூட்டத்தில் பொலிவு காட்டினர்.

ஆறரை இலட்சம் தமிழர் நாடற்றவராக்கப்படுவர்?

பண்டா சிங்கள வெறியின் உச்சத்தை எட்டிப்பிடிப்பார்!

கொழும்பு முடிவுக்கு டில்லி தலையாட்டிவிட்டதா?

கொழும்பு, ஏப். 6—

இலங்கைத் தீவில் குடிபுகுந்து, தீவின் இன்றைய வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணித்த தமிழர்களில், பல இலட்சம்பேரை 'நாடற்றவர்கள்' என்ற நிலைக்குத் துரத்த சிங்களவெறியர்களான பண்டா ஆட்சியினர் முடிவு செய்துவிட்டனர் என்றும், அந்த முடிவுக்கு டில்லியின் தலையசைப்பும் கிடைத்துவிட்டது என்றும் இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றனவாம்!

குடியுரிமை கோரி மனு செய்துள்ளவர்கள் 8,27,000 பேர் என்றும், இவர்களில் 6,50,000 பேர்வரை நாடற்றவர்களாக்கப்படுவர் என்றும் இலங்கை சர்க்கார் அதிகாரியின் அறிக்கை ஒன்றிலிருந்து தெரியவருகிறதாம்.

பரிசீலனை என்ற கண் துடைப்புடன், குடியுரிமை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு வருவது துரிதமாகி வருவதாகவும் இந்த வேலை இன்னும் சில மாதங்களில் முடிந்துவிடும் என்றும், அந்த வேலையின் முடிவில் இலட்சக்கணக்கான தமிழர்கள் 'நாடற்றவர்' என்ற பட்டம் சூட்டப்பட்டுவிடுவர் என்றும் கூறப்படுகிறது.

வெண்புறுக்கள் பறந்தன

வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பாராட்டு விழா

சென்னை--கோமளீசுவரன்பேட்டையில் கோலாகலமான நிகழ்ச்சி

சென்னை, எப். 8—

பொதுத் தேர்தலில், சென்னை எழும்பூர் தொகுதியில் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி, 7—4—57 காலை சென்னை—கோமளீசுவரன் பேட்டை (31-வது வட்ட) தி. மு. கழகச் சார்பில், கழகப் பணிமனையில் சிறுவர்களுக்குப் பால் வழங்கப்பட்டது.

நடுப்பகலில் ஏழைகளுக்கு உணவு அளிக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணியளவில் தோழர் க. அன்பழகன் அவர்கள் கழகப் பணிமனையிலிருந்து ஊர்வலமாக வட்டம் முழுவதும் அழைத்துச் செல்லப்பட்டார்.

வட்டத்திலுள்ள தெருக்கள் முழுதும் தோரணங்கள்கட்டி விழாக்கோலமாக காட்சி அளித்தன. ஊர்வலம் பல தெருக்களில் வரும்போது பொது மக்களாலும், கழகத் தோழர்களாலும் தோழர் க. அன்பழகன் அவர்கட்கு ஏராளமான மலர் மாலைகள் அணிவித்தும், கைத்தறி ஆடைகள் அணிவித்தும் சிறப்பித்தனர்.

மாலை 7 மணியளவில் ஊர்வலம் பாராட்டுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்தடைந்தது. ஊர்வலம் நடைபெறும்போது கழகத் தோழர்கள் 15 பேர் வெற்றி பெற்றதற்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் 15 வெண்புறுக்கள் பறக்கவிடப்பட்டன.

தோழர் எம். எஸ். அப்துல்காதர் தலைமையில் கூட்டம் துவங்கிற்று. அவர் தனது தலைமையுரையில் கழக வளர்ச்சியை விளக்கிப் பேசினர்.

அடுத்து, தோழர் க. அறிவழகன் அவர்கள் காங்கிரஸ் இத்தேர்தலில் ஓட்டுகளைப் பெற தகாத முறைகளைக் கையாண்டதையும் நமக்குள்ள தேர்தல் அனுபவத்தையும் தெளிவாக விளக்கிப் பேசினர்.

அடுத்துப் பேசிய தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் நம்முடைய எதிர்காலப் பணியையும் மாற்றாரின் எதிர்ப்பையும் விளக்கிப் பேசினர்.

பின்னர், தோழர் ரசூல் சிறிது நேரம் பேசினர்.

பின்னர், க. அன்பழகன் அவர்கள் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்தும், அரசியல் நிலையை விளக்கியும் பேசினர்.

இறுதியாக அண்ணு அவர்கள் மக்கள் நமக்களித்த ஆதரவையும், தேர்தலில் தோழர்கள் 'எதையும் தாங்கும் இதயத்தோடு' நடந்து கொண்டதைப் பாராட்டியும், நமக்குக் கழக வளர்ச்சியிலுள்ள அக்கரையையும் எதிர்க்கட்சிகளின் கண்ணோட்டத்தையும் விளக்கிப் பேசினர்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் வி. நெடுஞ்சேரலாதன் இயக்கப் பாடல்கள் பாடினர்.

அண்ணு அவர்களுக்கும், தோழர்கள் க. அன்பழகன், தலைமைவகித்த எம். எஸ். அப்துல் காதர், வட்டச் செயலாளர் இளஞ்சேரலாதன் ஆகியோருக்கும் பல கிளைகளின் சார்பிலும், பொதுமக்கள் சார்பில் மலர் மாலைகளும்—கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

சில குழந்தைகளுக்கு அண்ணு அவர்களால் பெயர்கள் சூட்டப்பட்டன.

★

ஒளிமுத்துக்களின் எண்ணிக்கை குறைவானலும், மதிப்புக் குறைந்ததல்ல

திருவட்டீசுவரன்பேட்டையில் வெற்றி வீரர்களுக்குப் பாராட்டுவிழா!

சென்னை, எப். 8—

7-4-57 மாலை சென்னை—திருவேட்டீசுவரன் பேட்டை—புரட்சித் திடலில், திருவல்லிக்கேணி தொகுதி தி. மு. கழகங்கள், துணை அமைப்புகள் சார்பில், சென்னை சட்டசபைக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக அபேட்சகர்களுக்கு ஒரு பாராட்டு விழா நடைபெற்றது.

துவக்கத்தில் கழகத் தோழர்கள் பலர் இயக்கப்பாடல்கள் பாடினர்.

பின்னர், விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் செயலாளர் தோழர் நீலநாராயணன் வரவேற்றுப் பேசினர்.

விழாவிற்கு தலைமை ஏற்று சிறப்புற நடத்தித் தருமாறு தோழர் மு. அரங்கநாதன் அவர்கள் முன்மொழிந்ததை தோழர் பூ. அரங்கசாமி அவர்கள் வழிமொழிந்ததற்கேற்ப தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமை வகித்து அரியதோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் 15 பேர்களே சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைக் குறித்து மாற்றார் சிலர் கேலியும் கிண்டலும் பேசி வருகின்றனர்.

"அவர்களுக்குச் சொல்லுவேன்—கடலிலிருந்து எடுக்கப்பட்ட முத்துக்கள் எண்ணிக்கையில் எத்தனையாயிருப்பினும் அந்த ஒளி முத்துக்களுக்குள்ள மதிப்பை யாரும் குறைத்துவிட முடியாது.

"இந்த விலையுயர்ந்த முத்துக்களை குறைத்துப் பேசுகின்றவர்கள் உண்மையிலேயே, பொதுமக்களை ஏமாற்ற நினைப்பவர்கள். ஆனாலும் உங்களுக்குந் தெரியும்—இந்த உயரிய முத்துக்கள் உங்களது சொந்த முத்துக்கள்; பெரும் மதிப்புப் பெற்றவை—என்பது!

"நாம் மொத்தத்தில் பெற்றிருக்கின்ற வாக்குகள், நம் வரலாற்றை எடுத்துக் கூறுகின்றன! அவையெல்லாம் நாம் நடந்து செல்லுகின்ற இலட்சியப் பாதையில் நமக்கு பின்னே அணிவகுத்து வரும் இலட்சிய ஆர்வம் படைத்தவர்கள் உணர்ந்து போட்ட ஓட்டுக்கள் ஆகும்!

"நாம், நமது வளர்ச்சி கண்டு பெருமைப்படுகிறோம் — பூரிப்படைகிறோம். இந்த நாட்டிலே ஜனநாயகத்தை கற்றுத் தருபவர்கள் நாம்தான் — அதேபோல அந்த ஜனநாயக முறையை நிலைநாட்டவும் நம்மாலேதான் முடியும். ஆகவே, பெரும் பொறுப்பேற்றுள்ள நாம், தோல்விகளைக் கண்டு மனங்கலங்காது தொடர்ந்து பணியாற்றுவது அவசியமாகும். நமது அருமைத் தோழர்கள் பெற்ற வெற்றியில் நமது தோல்வியை மறந்து, அவர்களை ஊக்குவித்து, நமது இலட்சியப் பாதையில் தொடர்ந்து நடக்க வேண்டியது அவசியமாகும்.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் சிறிது நேரம் பேசியதும், கூடியிருந்த பல்லாயிரக் கணக்கானோரின் ஆரவாரப் பேரொலிக்கிடையே பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அரியதோர் கருத்துரை ஆற்றினர்.

பின்னர், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சிறப்புரை ஆற்றியபின், இறுதியாக அண்ணு அவர்கள் நீண்டதோர் கருத்துரை வழங்கினர்.

இறுதியில் செயலாளர் தோழர் நீலநாராயணன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

குறிப்பு:—பொதுச்செயலாளர், அண்ணு ஆகியோரது பேச்சுக்கள் நாளை இதழில் வெளிவரும்.

அந்நியருக்குச் சொந்தமான

மலைத் தோட்டங்கள்

தேசிய மயமாக்குவதற்கு கேரள சர்க்கார் முடிவு?

திருவனந்தபுரம், எப். 8—

"கேரளத்திலுள்ள அன்னியர்களுக்குச் சொந்தமான மலைத் தோட்டங்களை தேசீயமயமாக்குவதற்கான திட்டங்கள் சம்பந்தமாக மத்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்த முதலில் தொடங்குவோம்"

என்று, கேரள முதன் மந்திரி கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டால், ஆட்சேபணை தெரிவிப்பதன்றி வேறு ஒன்றும் செய்ய இயலாதென்றும் அவர் கூறினர்.

'மலைத் தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டால் வெளிநாட்டு செலாவணியில் அல்லவா நஷ்டஈடு தொகை தரவேண்டியிருக்கும்?' என்று சுட்டிக்காட்டிய போது, முதலமைச்சர், 'இது சம்பந்தமாகக் கர்னல் நாசரிடமிருந்து நாம் சில விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது; உண்மையிலேயே, நேருவைப் பார்த்து நாசர் நடந்து கொள்ளவேண்டிய நிலைமையைப் பண்டித நேரு உண்டாக்கியிருக்கலாம்; ஆனல் நேரு அவ்விதம் செய்யவில்லை; நஷ்டஈட்டை ரூபாய் உருவத்திலேயே கொடுக்கலாம்,' என்றார்.

'பேட்டி முறை' ஒழியவேண்டும்!

தொடர்ந்து நீடிப்பதற்கு மத்தியஅமைச்சர்எதிர்ப்பு

புதுடில்லி, எப். 6—

அரசாங்க உத்தியோகங்களுக்கு மனுச் செய்பவர்களை 'பேட்டி கண்டு பரீட்சை' நடத்தி, அதற்கு மார்க்குகள் போடும் முறையை மத்திய அமைச்சர் பண்டித பந்த் கண்டித்துள்ளார்.

"முதல் முறை பேட்டியில் 15 மார்க்குகள் பெற்றவர் அடுத்த ஆண்டு பேட்டியில் 115 மார்க்குகள் பெற்றுத் தேர்வு பெறுகிறார்; ஓராண்டில் எப்படி அவர் அவ்வளவு வளர்ச்சி பெற்று வருகிறாரோ, தெரியவில்லை. இது மிகவும் தவறான முறையாகும்; ஆகவே, இந்தப் 'பேட்டி' முறை தொடர்ந்து இருக்கவேண்டுமா என்பதைப் பரிசிலனை செய்ய வேண்டும்,' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ராக்கெட் குண்டுகள்மூலம் சூரிய புள்ளி ஆராய்ச்சி?

வாஷிங்டன், எப். 6—

இந்த ஆண்டு ஜுலை 1-ந் தேதி ஆரம்பமாகும் சர்வதேச பூமி—பௌதிக ஆண்டில் சூரியப் புள்ளிகள் பற்றி ஆராய்வதற்கு 14 ராக்கெட்டு குண்டுகளை அனுப்புவதற்கு அமெரிக்க ஆராய்ச்சிக் கூடங்கள் திட்டமிட்டுள்ளனவாம்.

'இந்தியாவில் பரீட்சை முறை ஒரு லாட்டரி போல் இருக்கிறது'

'திறமையுள்ள மாணவர்களைப் பெரிதும் பாதிக்கிறது'

புதுடில்லி, எப். 6—

"இந்தியாவில் கல்வி முறையில் மாறுதல்களைச் செய்வதற்குத் தடையாக இருப்பவைகளில் பரீட்சை முறையும் ஒன்றாகும்; பரீட்சை முறையை மாற்றினலொழிய கல்விச் சீர்திருத்தம் சாத்தியமில்லை யென்பது சரியாக உணரப்படவில்லை; ஆகவே, 'இருக்கிறபடி இருக்கட்டும்' என்று அலட்சியமாக இருந்து வருகிறோம்"

என்று, எஸ். எஸ். எல். சி. பரீட்சைக் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில், இந்திய சர்க்கார் கல்வி இலாகா செயலாளர் கூறியுள்ளார்.

சிகாகோ பல்கலைக் கழகத் தலைவர் புளும் என்பார் கூறியதாவது:—

"இந்தியாவில் பரீட்சை என்பது ஒரு லாட்டரிபோல் ஆகிவிட்டது; திறமையுள்ள மாணவர்களை இது பாதிக்கிறது. கல்வி போதனை முறையை மாற்ற வேண்டும். பாடங்களை எதற்காகப் படிக்கிறோம் என்பதை மாணவர்களை உணரச் செய்ய வேண்டியது அவசியமாகும். இந்தியாவில் பரீட்சை முறையை உடனடியாக அழித்துவிட முடியாது."

நன்றியறிவிப்பு

சென்னை சட்டசபைத் தேர்தலில், மேலூர் (பொது) தொகுதிக்கு தி. மு. கழக அபேட்சகனகப் போட்டியிட்ட எனக்கு, தன்னலங்கருதாமல் உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் ஈடுபடுத்தி, இன்னல் பல ஏற்றுப் பணியாற்றிய கழகத் தோழர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் எனது இதயங்கனிந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்வதுடன், எனக்கு வாக்குகளை அளித்ததின் மூலம், தி. மு. கழக இலட்சியங்களுக்குப் பெருமையையும் ஆதரவும் தந்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது உளமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

ஏ. வேலுசாமி

★

கிருஷ்ணகிரித் தொகுதி மக்கள் சபைக்கு தி. மு. க. அபேட்சகனகப் போட்டியிட்ட என்னை ஆதரித்து, உற்சாகத்துடன் பணிபுரிந்த கழகத் தோழர்கள், கழக அனுதாபிகள், பள்ளி மாணவர்கள், வணிகப் பெருமக்கள், ஆகியோருக்கு என்னுடைய பணிவன்பான வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, வாக்காளர் பொதுமக்களுக்கும் எனது நன்றியறிதலை தெரிவித்துக்கொண்டு, வழக்கம்போல் கழக வேலைகளில் பணிபுரிந்து வருவேன் என்பதையும் உறுதி கூறிக் கொள்கிறேன்.

அன்பன்,

இரா. சகநாதன்

★

பொதுத் தேர்தலில் சென்னை சட்டசபைக்கு திருத்துறைப் பூண்டி தொகுதியில் தி. மு. கழக சார்பில் போட்டியிட்ட எனக்கு, தொகுதியிலுள்ள கிளைக் கழகங்களெல்லாம் ஆர்முடன் பணியாற்றியதற்கும், நண்பர்களெல்லாம் இரவு—பகல் பாராமல் ஓயாது—ஒழியாது உழைத்ததற்கும், டெபாசிட் கட்டக்கூட வசதியில்லாமல் நின்ற எனக்காக டெபாசிட் தொகை தந்து, தேர்தல் சம்பந்தமான எல்லாச் செலவுகளையும் ஏற்றுக்கொண்ட தொகுதியிலுள்ள எல்லாக் கிளைக் கழகங்களுக்கும் எனது அருமை நண்பர்களுக்கும், பெருமதிப்பிற்குரிய வாக்காளர்களுக்கும், கிளைக் கழகத்தைக் கட்டிக் காத்துவரும் நண்பர்களுக்கும், மற்றுமுள்ள பெரியோர்கள்— தாய்மார்கள் அனைவருக்கும் எனது நன்றி உரியவாகுக! என்றும் கழக இலட்சியம் போற்றுவோமாக! தி. மு. கழகத்தின் சார்பாக தூய பணியாற்றுவோமாக!

அன்பன்

ந. தருமலிங்கம்

★

பொதுத் தேர்தலில், டில்லி பாராளுமன்றத்திற்கு சிதம்பரம் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகனகப் போட்டியிட்ட எனக்கு தோழர்கள் தங்களால் இயன்றவரை பணியாற்றியமைக்கு என் நன்றி-வணக்கம்.

யான் வாக்காளர்களின் நல்லன்பைப் பெற்றமைக்குப் பெரிதும் துணைபுரிந்த எல்லோருக்கும் என் அன்பு-வணக்கம். வெற்றி இல்லை எனினும் என்றும் தொடர்ந்து பணிபுரிய கடமைப்பட்டுள்ளேன்.

அன்பன்

புலவர் கூ. ஆறுமுகம்

'செந்தமிழ்ப் பெயரின்றி பல ஊர்கள் உள்ளன'

அரசியலார் ஆவன செய்யவேண்டுமென தமிழ்ப் பேராசிரியர் வற்புறுத்தல்

சென்னை, எப். 5—

"தமிழ் மக்களிடம் தற்போது ஏற்பட்டுள்ள நல்ல மறுமலர்ச்சி, மேலும் வளர்ந்து தமிழரனைவரும் ஒரு முகமாக நின்று பாடுபட்டால், தூய செந்தமிழ் பெயர் சொற்களால் ஊர்களும் பெயர்களும் வழங்குமாறு செய்யலாம். மாயூரம் என்பதை 'மயிலாடுதுறை' என்று தமிழ் மரபுக்கேற்றபடி மாற்ற வேண்டும். இப்படி பல ஊர்கள் செந்தமிழ்ப் பெயரின்றி உள்ளன. இதனை அரசியலார் கவனித்து ஆவன செய்யவேண்டும்,'

என்று, அண்மையில் டாக்டர் பட்டம் பெற்ற திரு இரா. பி. சேதுபிள்ளையவர்கள் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக் கூட்டமொன்றில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இரு இடங்களுக்கு தனித்தொகுதி அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பது சரியா?

இந்திய உயர் நீதிமன்றத்தின் முடிவு கோரப்படும்?

புதுடில்லி, ஏப். 8—

சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் இரு இடங்களுக்கும் தனித் தொகுதி அபேட்சகர்களே தேர்ந்தெடுக்கப்பட்டது நினைவிருக்கலாம். இதற்கு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 54 - (4) பிரிவு அனுமதித் தருகிறது.

'இந்த முறை நியாயமானதல்ல' என்று சுப்ரீம் கோர்ட்டில் சட்ட நிபுணர்கள் வாதாடப் போவதாகத் தெரிகிறது.

'இந்திய அரசியல் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சம உரிமை, சம பாதுகாப்பு ஆகியவைகளுக்கு 1951-ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 54-(4) பிரிவு புறம்பானது' என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக வழக்கறிஞர் சட்டர்ஜி பண்டித நேருவுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளாராம். இதை, இந்திய சட்ட இலாகா பரிசிலனைக்கு பண்டிதர் அனுப்பியுள்ளாராம்.

தேர்தல் குழுவிடம் மனுச் செய்துகொண்டால், முடிவு காண்பதற்கு காலதாமதமாகும்; எனவே மக்கள் தலைவரே, இந்திய அரசியல் சட்டத்தின் 143 - வது பிரிவுப்படி தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்திய சுப்ரீம் நீதிமன்றம் இதைபற்றி பரிசிலனை செய்ய வேண்டும் என்று உத்திரவிடலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

மத, மூடநம்பிக்கைகளின் கோரப் பிடிப்பு!

உணவுப் பழக்கங்களை மக்கள் மாற்ற மறுப்பதற்குக் காரணம்

ஆந்திர சுகாதார மந்திரி கருத்து விளக்கம்

"ஆகாரமே கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கும்போது, 'சம சத்துள்ள உணவு தேவை' என்று பேசுவது அர்த்தமற்றது"

என்று, ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி கூறியிருக்கிறார்.

உலக சுகாதார தினக் கொண்டாட்டத்தையொட்டி நடைபெற்றக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:—

"இப்போது உடனடியாகத் தேவைப்படுவதெல்லாம் அதிகமான உணவு உற்பத்திதான்; மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்கும் அதே நேரத்தில், மக்களின் வாங்கும் சக்தியையும் நாம் அதிகரித்தாக வேண்டும்.

"மக்களில் 10 சதவிகிதம் பேருக்குக்கூட நல்ல சத்துள்ள உணவு கிடைப்பதில்லை."

அந்த நாளில், வானொலியில் பேசிய ஆந்திர மாநில சுகாதார இலாகா மந்திரியான நவாப் மெஹ்தி நவாஜ் ஜங் என்பார் குறிப்பிட்டதாவது;—

"உடலுக்கு சக்தியூட்டத் தேவையான அம்சங்கள், சத்துக்கள் அடங்கிய உணவு கிடைப்பதில்லை. நல்ல வசதி படைத்தவர்கள், படித்தவர்களின் உணவு கூட குறைபாடு மிக்கதாகவே இருக்கிறது.

"மேலும், தகுதியற்ற உணவு—மிதமிஞ்சிய உணவு—தவறான சத்துணவு இவையும் மக்களிடை, வெகு சாதாரணமாகக் கைக்கொள்ளப்பட்டிருக்கிறது.

"இதற்குக் காரணம், உணவுப் பற்றாக்குறையும் எழ்மையும் மட்டுமல்ல; அறியாமையும் மூடநம்பிக்கையும்கூட காரணமாகும்.

"நெடுக தொடர்ந்து வந்துள்ள மத நம்பிக்கை காரணமாக, மக்கள் தங்களின் உணவுப் பழக்கங்களை மாற்றிக்கொள்ள மறுக்கிறார்கள்; எனவே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதுமட்டும் போதாது; விஞ்ஞான அறிவை அடிப்படையாகக் கொண்ட நல்ல ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும் மக்களிடை ஏற்படுத்தியாக வேண்டும்."

உயர்தர அதிகாரிகளின் சம்பள உயர்வு

உத்தரவை நிறுத்தி வைக்கிறது கேரள மாநில சர்க்கார்

திருவனந்தபுரம், ஏப். 8—

கேரளத்தில் கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக, மாநிலத்தில் உள்ள கெசட் பதிவு பெற்ற அதிகாரிகளின் சம்பளம் ரூ. 1,000-த்திலிருந்து ரூ. 1,600-ஆக உயர்த்தப்பட்டது.

ஜனாதிபதி ஆட்சியின்கீழ் கவர்னர் பிறப்பித்திருந்த இந்த உத்தரவை நிறுத்திவைப்பது என்று கம்யூனிஸ்டு சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

பதிவுபெறாத சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்களையும் உயர்த்தித்தான் பழைய உத்தரவு இருந்தது; அதனை, கம்யூனிஸ்டு சர்க்காரின் நடவடிக்கை பாதிக்காது.

கெஜட் பதிவு பெற்ற ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் உயர்வை மாநில கம்யூனிஸ்டு கட்சி கண்டித்திருந்தது.

உணவு உற்பத்தி திட்டம் தோல்வியுற்றதா?

பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதேன்!

இரங்கூன், ஏப். 8—

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாட்டின் உணவு உற்பத்திக்கு முக்கிய இடம் தரப்பட்டது; ஆனால் இந்தத் திட்டம் தோல்வியுற்றிருக்கிறது என்பதற்கான மற்றொரு ஆதாரம் கிடைத்திருக்கிறது.

பர்மாவிலிருந்து 5 - இலட்சம் டன் அரிசியை பணம் கொடுத்து வாங்கிக்கொள்ள இந்தியா இப்போது முடிவு செய்துள்ளதாம். இதற்கான ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட்டுள்ளதாம்.

வெற்றி பெற்ற எம்.எல்.ஏ. பதவி இழந்தார்

ஷிமோகா, ஏப். 7—

சன்னகிரி தொகுதியிலிருந்து மைசூர் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட குண்டூர் ருத்ரப்பா என்பவர் தேர்தல் செலவு கணக்குகளைக் குறித்த காலத்தில் அனுப்பாத காரணத்தால், அவருடைய தேர்தல் செல்லாது என்று தேர்தல் குழு தீர்மானித்துள்ளது.

நிலச் சீர்திருத்தம்

கேரள முதலமைச்சர் விளக்கம்

மாநில சட்டசபையின் முதல் கூட்டத்தில், கேரளத்தின் நிலப் பிரச்சினையைப் பரிசிலனை செய்ய குழு ஒன்று நியமிப்பதற்கான பிரேரணை கொண்டுவர உத்தேசித்திருப்பதாகவும், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இக்குழு அறிக்கை சமர்ப்பிக்குமென்றும் முதலமைச்சர் நம்பூதிரிபாத் கூறியுள்ளார்.

இதற்கிடையில், நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்கு அவசரச் சட்டம் அல்லது மசோதா மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குடியானவர்கள் வெளியேற்றப்படுவதைத் தடுப்பதற்கு, முன்னமேயே ஒரு சட்டமிருப்பதை சுட்டிக்காட்டியபோது அவர், அச்சட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதாகவும், சிறிது நாட்களில் அது காலாவதியாகிவிடும் என்றும் குறிப்பிட்டார். முன்னர் பைசலாகாமலிருந்த நிலச் சீர்திருத்த மசோதாக்களைவிட தீவிர நடவடிக்கையுள்ள புதிய மசோதாக்கள் கொண்டுவரப் போவதாகவும் அவர் கூறினார்.

தசாம்ச நாணய முறை ஒரு ரூபாய் நோட்டுகள்

விரைவில் வெளியிடப்படுமாம்

புதுடில்லி, ஏப். 8—

இந்திய அரசாங்கம் சமீபத்தில் புதிய ஒரு ரூபாய் நோட்டு வெளியிட முடிவு செய்துள்ளதாம்.

தசாம்ச நாணய முறையில் வெளியிடப்படவிருக்கும் ரூபாயின் வடிவம் இந்தப் புதிய நோட்டில் அச்சிடப்பட்டிருக்கும் என்று தெரியவருகிறது. இந்த மாறுதலைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் பழைய நோட்டுகளைப் போன்றே இந்த நோட்டு இருக்குமாம்.

கிராமப்புறங்களில் தொண்டாற்றும் தகுதி

விவாத அரங்கில் ஆராய்ச்சி

கொடைக்கானல், ஏப். 6—

இங்கு இந்திய மாநிலங்களின் பிரதிநிதிகள் கூடி சமுதாய அபிவிருத்தியைப் பற்றி விவாதித்துள்ளனர்.

'கிராமப்புறங்களில் தொண்டாற்றும் தகுதி யாருக்குஉண்டு?' என்ற பிரச்சினையைப் பற்றியும் விவாதம் நடைபெற்றுள்ளது.

அத்தகுதி, மணமாகாத மங்கையருக்கா? மணமானவர்களுக்கா? கைம் பெண்களுக்கா? —என்று ஆராய்ந்தனர்.

"மணமாகாத பெண்கள் கிராமப்புறங்களில் தொண்டாற்றச் செல்வதால், அவர்கள் நல்ல விதத்தில் திருமணம் செய்துகொள்ள வாய்ப்பு கிடைக்காமல் போகிறது" என்று, டிசோஸா என்பவர் தன் கருத்தை வெளியிட்டார்.

இந்தக் கருத்தை மறுத்து, மத்திய குடும்பப்பொருளாதார இலாகாவைச் சேர்ந்த இராஜாம்பாள் தேவதாஸ் என்பவர் பேசியுள்ளார்—'திருமணம் ஆனாலும் ஆகாவிட்டாலும் பெண் பெண்ணாகத்தான் இருப்பாள்; அறிவுள்ள பெண்களுக்குக் கற்பை காப்பாற்றிக் கொள்ளத் தெரியும். உண்மையில் இந்தப் பதவிகளுக்கு வயதான பெண்கள், விதவைகள், திருமணமானவர்கள் ஆகியவர்களை நியமிப்பதைவிட கல்வியறிவு பெற்ற இளம் பெண்களே கிராம சேவைக்கு இலாயக்கானவர்கள்,' என்று எடுத்துரைத்தார்.

பம்பாய், ஏப். 8—

பிரிட்டனுக்கும், மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் விநோபா சென்று 'சர்வோதய'க் கொள்கையைப் பரப்பப் போவதாகத் தெரிய வருகிறது.

அஞ்சல் கட்டண உயர்வுக்கு விளக்கம்

அஞ்சல் அட்டைகள், உறைகள் முதலியவைகளின் விலையை உயர்த்தி, அதற்கு ஈடாக 'நயா பைசா' நாணயத்தில் அதிகக் கட்டணம் வசூலிப்பது பற்றி தபால் தொலைவரி இலாகா தானாகவே ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"புதிய மதிப்புகள் இந்திய தபால் (அஞ்சல்) சட்டத்திற்கு உட்பட்டே செய்யப்பட்டிருக்கிறது; அதில் சட்டவிரோதம் எதும் இல்லை," என்று அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வரைத் தடுக்கிற அதிகாரப் பாதுகாப்புப் படையினரான போலீசாருக்குக் கிடையாதாம்! நாணயமான சர்க்காரா யிருந்தால்—நாகரிகமான சர்க்காராயிருந்தால், அந்த அதிகாரத்தை போலீஸ் படைக்கு வழங்கியிருக்கவேண்டாமா?

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்)

ஆர். எஸ். பி. தலைவர் கைது

திருவனந்தபுரம், ஏப். 8—

உயர் நீதிமன்றக் கிளர்ச்சி சம்பந்தமாக திருவனந்தபுரம் மாவட்டப் புரட்சிசோஷலிஸ்டு தலைவர் கே. என். சுகுமாரன் அவர்கள் மீதிருந்த வாரண்டுப்படி, அவர் இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

முதன் மந்திரி நம்பூதிரிபாத், நேற்றுத்தான் அரசியல் வழக்குச் சம்பந்தமாக எல்லா வாரண்டுகளையும் வாபஸ் பெறப் போவதாக அறிவித்திருந்தார்.

திருமணம்

11—4—57 காலை 11 மணிக்கு கோவில்பட்டி நகர தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் ஜி. தேவராசன்—தோழியர் சீதாலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தவிழா, தோழர் டபிள்யூ. டி. துரைசாமி தலைமையில் கோவில்பட்டி—மாதாங்கோவில் தெரு, மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★

மாயூரம் தொகுதி

தி. மு. க. தேர்தல் வழக்கு நிதி

சிறப்புக் கூட்டம்

★

15—4—57 காலை 9-மணிக்கு மாயூரம் இரயிலடி சண்முகா டாக்கீசில்

பேசுவோர்:

அண்ணா

இரா. நெடுஞ்செழியன்

குடவாசல் கிருஷ்ணமூர்த்தி

★

நன்கொடை: ரூ. 10, 5, 2, 1.
பெண்கள் (தரை) அணா 8.

★★★★★★★★★★★★★★★★★★

அண்ணா

சுற்றுப்பயணம்

ஏப். 11: காஞ்சீபுரம்
12: வேலியூர்
13: திருவள்ளூர் கலைக் கழகம்
14: குளித்தலை
15: காலை — மாயவரம்;
,, மாலை — பொன்மலை திருச்சி
16: பெரம்பலூர்
17: நெல்லிக்குப்பம்
18: விருத்தாசலம்
19: தம்மம்பட்டி
20: ஆரணி (வ. ஆ.)
21: சென்னை

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

"12-4-57 மாலை 6-மணிக்கு செங்கற்பட்டு மாவட்ட செயற்குழு அவசரக் கூட்டம் குன்றத்தூரில், மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறும். அனைவரும் குறித்த நேரத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன்"

என்று செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் தி. ந. சம்பந்தம் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

★

பாப்பநாய்க்கன் பாளையம்:
திரு. வி. க. திடலில்
11-4-57 மாலை 6-30 மணிக்கு
பேசுபவர்: சி. பி. சிற்றரசு

அவசரகால அமைச்சரவை நியமனம்

முற்றுகை நிலைமையில் நாடு இருப்பதாக தலைவர் சுகர்னோ பிரகடனம்?

ஜகார்தா, ஏப். 8—

இந்தோனேஷிய மக்கள் தலைவர் டாக்டர் சுகர்னோ, நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிக்கு ஒரு முடிவு கண்டுள்ளார்.

நாடு முற்றுகை நிலைமையில் இருப்பதாகக் கூறி பாராளுமன்றத்திற்குச் சம்பந்தமில்லாத அவசரகால அமைச்சரவை ஒன்றை அவர் நியமித்துள்ளார். இது சம்பந்தமாக டாக்டர் ஹட்டாவுக்கு எவ்வித அழைப்பும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் யுவாந்தா என்பவரைப் பிரதமராகக்கொண்ட நிபுணர்களடங்கிய அமைச்சரவை நியமிக்கப்பட்டிருக்கிறது என்று டாக்டர் சுகர்னோ அறிவித்துள்ளார்.

இவர், டாக்டர் அலி சஸ்த்ரோமித்ஜோஜோ அமைச்சரவையில் திட்ட மந்திரியாகப் பணியாற்றியவர்.

ஸ்டாலின் பரிசு பெற்ற டாக்டர் பிரியோனோ கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரை நியமிப்பதை முன்பு எல்லா முஸ்லிம் கட்சிகளும் எதிர்த்தன.

இந்த அமைச்சரவையில் மொத்தம் 23 பேர் உள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.